


இல்லாத புலியளுக்கு
இவையள் இன்னும் எவ்வளவு
காலம் தான்
தடை போடப்போயினமோ?

Registered as a Newspaper

பக்கங்கள் – 16+4
விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 245

ஞாயிற்றுக்கிழமை
28 ஜூலை 2024

ஆடி 12
வள்ளுவர் ஆண்டு 2055

# மேலும் 6 மாதங்கள் புலிகளுக்குத் தடை!

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு



பாரிஸ், ஜூலை 28
தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.
பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் நோக்கில் சில அமைப்புகள் மற்றும் குழுக்கள் மீதான தடைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கடந்த சில நாள்களாக மறுபரிசீலனை 04



# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன்!

## காலியில் வைத்து ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதை காலியில் நேற்று மாலை இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் வைத்து உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 04

## அஞ்சல் பணியாளர்கள் 12,000 பேர் கடமையில்

கொழும்பு, ஜூலை 28
ஜனாதிபதித் தேர்தலுக்காக 12 ஆயிரம் அஞ்சல் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக் 04

### எல்லைதாண்டிய மீன்பிடி

## புழல் சிறையில் இருந்த இலங்கை மீனவர்கள் விடுதலை

சென்னை, ஜூலை 28
எல்லை தாண்டிய மீன்பிடிக்காக புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த, இலங்கை மீனவர்கள் ஏழு பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். 04

## வெற்றிலை வியாபாரி மீது மருதனார்மடத்தில் தாக்கு!

### நால்வர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 28
மருதனார்மடத்தில் வியாபாரத்தை முடித்துவிட்டு வீடு திரும்பிய வெற்றிலை வியாபாரி ஒருவர் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 04

## பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தேர்தல் பணிகள் ஒப்படைப்பு!

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபருக்கான கடமைகளை முன்னெடுப்பதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளதால் தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.வை. அசங்க கரவிட்டவை தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.
தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான வர்த்தமானியை வெளியிட்ட பின்னர் சிரேஷ்ட 04

# சஞ்சீவி



## கறுப்பு ஜூலை நினைவு யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 28
கறுப்பு ஜூலைப் படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தலும் பொதுக்கூட்டமும் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.
ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில், முன்னாள் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தலைமையில், யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்க மண்டபத்தில் இந்த நினைவேந்தல் 04

### அனலைதீவுக் கொள்ளை

## பிரதான சந்தேகநபரான பெண் வேறு குற்றங்களுடன் தொடர்பு?

### பாதிக்கப்பட்டிருந்தால் முறையிடும்படி பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாணம், அனலைதீவில் கனேடிய தமிழ்க் குடும்பம் மீது வன்முறைக் கும்பலொன்று நடத்திய தாக்குதலை ஒழுங்கமைத்த 36 வயதுடைய பெண்ணுக்கு, வேறு பல குற்றங்களுடன் தொடர்பிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அனலைதீவில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கனேடிய தமிழ் 04

## தமிழர்களின் ஆதரவு ரணிலுக்கே கிட்டுமாம்

### மஹிந்தானந்த எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 28
வடக்கு- கிழக்கில் உள்ள தமிழர்களின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரி 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற சுயாதீனத்தை கடாசுகிறது அரசாங்கம்

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 28**

**நீதிமன்றத்தின் உத்தரவுகளை வேண்டுமென்றே கடைப்பிடிக்க மறுக்கும் போக்கினை அரசாங்கம் சமீபகாலத்தில் பின்பற்றுவதை அவதானிக்க முடிகிறது. இது அனைத்து அம்சங்களிலும் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையான விடயம்.**

-இவ்வாறு தேசபந்துதென்னக்கோனின் பதவி தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு தொடர்பில் அரசாங்கம் நடந்து கொள்ளும் விதம் குறித்து சட்டத்தரணிகள் அமைப்பான சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக்காட்டியுள்ளது.

தேசபந்துதென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக தொடர்ந்து பணிபுரிவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டால் அந்த பதவிக்கான அதிகாரங்களை பயன்படுத்த முயன்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகும்.

அரசமைப்பு பேரவையின் செயற்பாடுகளை உயர்நீதிமன்றம் சவாலுக்குட்படுத்த முடியாது என பிரதமர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார். பிரதமர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை வலுவற்றதாக்காது என்றும் சட்டத்தரணிகள் ஒன்றிணைவு கண்டனம் வெளியிட்டுள்ளது. (ச-இ)

# தேசபந்துவுக்கு அநுர சவால்



தேசபந்து தென்னக்கோன் எதிர்காலத்தில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினால் அது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக பிரதமர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். "நாயை குளிப்பாட்டுவதற்கு அழைத்துச் செல்வது போல் இந்த ஜனாதிபதி இந்த தேர்தலை வழிநடத்துகிறார் .

குறிப்பாக, தேர்தலை சந்திக்காமல் தனது இருப்பை எப்படி பலப்படுத்துவது என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் முயற்சி செய்து வந்தார். சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த பொலிஸ்மா அதிபர் நியமனத்தை தவிர்த்து வந்தார். மேலும் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படமாட்டார் என்றும் பதவி வெற்றிடமில்லை என்றும் கூறுகின்றனர்.

முடிந்தால் தென்னக்கோன் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் பொலிஸ்மா அதிபர் என்று கையெழுத்திட்டால் நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்" -என்றார். (ஒ-இ)

# ஆசிரியர் மீது கத்திக்குத்து!

## மாணவன் கைது

கொழும்பு, ஜூலை 28

புத்தளம் பிரதான பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரை கத்தியால் குத்தி தாக்கிய குற்றச்சாட்டில் மாணவன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான ஆசிரியர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாடசாலையின் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவனே ஆசிரியர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முதற்கட்ட விசாரணையில் மாணவனின் தலைமுடி தொடர்பில் ஆசிரியர் கண்டித்தமையாலேயே மாணவன் தாக்குதல் நடத்தியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# கடமையைச் செய்யாவிடின் பதவியைத் துறவுங்கள்!

## ஜனாதிபதிக்கு தயாசிறி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 28

பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் கடமையை ஜனாதிபதியால் செய்யமுடியாது என்றால். அவர் அந்த பதவியில் இருந்து விலகி, பிரதமரை பதில் ஜனாதிபதியாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் பூரண அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கிறது. பதில் நியமனங்கள் வழங்கும் அதிகாரம் அரசமைப்பு பேரவைக்கு இல்லை. ஜனாதிபதி இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியே பதில் சட்டமா அதிபரையும் நியமித்திருந்தார்.

ஜனாதிபதி தனது கடமையை செய்ய வேண்டும். பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க தற்போதுள்ள பொலிஸ்மா அதிபரின் பதவி வெற்றிடமாகவில்லை என அமைச்சர் சுசில் பிரேமசந்திர தெரிவித்தார்.

அப்படியானால், பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித ஜயசுந்தரவை கட்டாய விடுமுறையில் அனுப்பினோம். அப்போதும் பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாக வில்லை.

அப்போது சீ.டீ. விக்ரமநாயக்கவை பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்தது யார்? அவர் பதில் பொலிஸ்மா அதிபராக கடமையை செய்துகொண்டு சென்றார்.

அதனால் இப்போது ஜனாதிபதிக்கு தனது பொறுப்பைச் செய்யமுடியாது என்றால், அவர் அந்தப் பதவியில் இருந்து விலகி, பிரதமருக்கு அந்த அதிகாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# கட்டுப்பணம் கட்டுவதற்கு காசில்லாமல் சென்ற பிக்கு!

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்துவதற்கு பத்தரமுல்லை சீலரத்தன தேரர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தார்.

எனினும் கட்டுப்பணம் செலுத்துவதற்கான பணத்தை பத்தரமுல்லை விகாரையில் விட்டுவிட்டு வந்ததால் கட்டுப்பணம் செலுத்தவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் நாளை திங்கட்கிழமை மீண்டும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தவுள்ளதாக பத்தரமுல்லை சீலரத்தன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# வேலைவாய்ப்பு மோசடி: 5 நாள்களில் 12 பேர் கைது

இம்மாதம் 22 ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதிக்குள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடி தொடர்பில் 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது. கட்டார், நியூஸிலாந்து, மலேசியா, ருமேனியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டிலேயே 5 பெண்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தனிநபர் வருமானம் 2048 இல் உயரும்

## அரசாங்கம் ஆருடம்



2048 ஆம் ஆண்டளவில் தனிநபர் வருமானத்தை 20ஆயிரம் டொலராக அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டில் மாற்றத்தை கொண்டுவருவதற்கான சிறந்த அத்திபாரம் இப்போது இடப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் உடன்படிக்கையை மாற்றியமைத்துக்கொண்டு யாருக்கும் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாது. இவ்வாறு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டவரைவுகள் மீதான விவாதத்தில் போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இந்த சட்டவரைவை எதிர்க்கும் எவராலும் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆட்சி செய்யமுடியாது. எமது நாடு 2027 ஆம் ஆண்டு வரை கடன்களைச் செலுத்தாமல் இருப்பதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பிலான உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது - என்றார். (ச-இ)

# முத்துறையின் மோதல் நாட்டுக்கு நல்லதல்ல!

தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத் துறை, நாடாளுமன்றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியமானது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவை ஏற்றுக்கொள்ளமுடியாது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன அறிவித்திருந்தார்.

தேர்தல் தொடர்பிலும், பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பிலும் பல தரப்பினராலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, நாடாளுமன்றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியம். சுயநலத்தை விட நாட்டின் எதிர்காலம் முக்கியமானது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறி ஆலயப்பூசகர் ரி.ஐ.டி.யினரால் விசாரணை

வவுனியா, ஜூலை 28

வவுனியா, வெடுக்கு நாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரான மதிமுகராசாவை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் வவுனியா அலுவலகத்தினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு கிராம அலுவலர் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மதிமுகராசா பயங்கரவாத புலனாய்வுப்பிரிவின் வவுனியா அலுவலகத்துக்குச் சென்று இருந்தார். அங்கு கடும் விசாரணைகள் இடம்பெற்றதோடு வெடுக்குநாறி ஆலயம் தொடர்பான பல்வேறு விடயங்களும் அவரிடம் வினவப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)



எதிர்ப்புகளுக்கு மத்தியில்

# நீதிமன்ற அனுமதியுடன் அளவீட்டுப் பணிகள்

மன்னார், ஜூலை 28

**மன்னார்த்தீவில் பேசாலையில் ஆலயம் மற்றும் பொதுமக்களின் காணிகளை அளப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிமன்ற கட்டளையைப் பெற்று நில அளவை செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

இருப்பினும் மக்கள் பதாகைகள் ஏந்தி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார்த் தீவில் காற்றாலை அமைப்பதற்கும் மற்றும் கனியவள மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கும் எதிராக மன்னார்த் தீவு மக்கள் மற்றும் பொது அமைப்புகள் காலத்துக்குக் காலம் தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பேசாலைப் பகுதியில் இரண்டாம் கட்ட காற்றாலை அமைப்பதற்கான முன்னெடுப்பு தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக காற்றாலைகள் அமைப்பதற்கான காணிகள் அளக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பேசாலையில் ஆலயத்துக்கும் பொதுமக்களுக்கும் சொந்தமான காணிகளை அடாத்தாக அளக்க முற்பட்டபோது அன்றைய தினம் மக்கள் அவ்விடத்தில் ஒன்று திரண்டு நில அளவை செய்யவிடாது தடுத்தனர்.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற கட்டளையைப் பெற்றுக் கொண்டுபலத்தபாதுகாப்புகளுடன்நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய மற்றும் மக்களின் காணிகளும் அளக்கும் பணி இடம்பெற்று வருகின்றது. (ஒ-60)

## திட்ட மீளாய்வு கூட்டம்

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி மாவட்ட திட்ட மீளாய்வுக் கூட்டம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் தடையாக இருக்காது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர், அரசாங்க வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது, வேட்பாளர்களுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராக அவை பயன்படுத்தப்படுமாயின், தேர்தல்கள் ஆணைக் குழுதமது கரிசனையை வெளிப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (ப-113)



## 20 விருதுகள் வடக்குக்கு

கொழும்பு, ஜூலை 28

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறனை மதிப்பிடுவதற்கான ஸ்வர்ணபுரவர தேசிய விருது வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொண்டார்.

நாடுமுழுவதுமுள்ள276 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டம் கட்டமாக நடத்தப்பட்ட சபைகளின் செயற்றிறன் மதிப்பீட்டின் அடிப்படையில் 62 விருதுகளில் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் 20 விருதுகளைக் கைப்பற்றி தேசிய ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை முதலாமிடத்தைப் பெற்று தங்க கேடயத்தையும் பெற்றுக் கொண்டது. வலி. வடக்குப் பிரதேசசபை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வவுனியா மாவட்டம் 9 விருதுகளைப் பெற்றதோடு வவுனியா நகரசபை வெள்ளிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை வெண்கல கேடயத்தைப் பெற்றது. (ஒ.25,18)

## ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெடுந்தீவின் நெடுவூர்த் திருவிழாவை முன்னிட்டு, மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தந்துதவுமாறும், ஆக்கங்களை delftdoc@gmail.com எனும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (ப-66)

## தென்னம்பிள்ளை காணியினை மீட்டெடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 28

பூநகரி, சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் அமைந்துள்ள தென்னம் பண்ணையில் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட காணியை மக்களுக்கு பகிர்ந்து வழங்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளால் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் தென்னங்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன. 2009 ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் சின்னப்பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் காணிகள் அற்ற குடும்பங்களுக்கென 25 ஏக்கரும் இப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு என 75 ஏக்கர் காணிகளும் வழங்கப்பட்டன. இக்காணிகள் வழங்குவதற்கு முன்னர் முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு கிராமங்களில் காணிகள் அற்ற குடும்பங்களுக்கு குறித்த காணி பகிர்ந்தளிக்கப்படவேண்டும் அல்லது வட மாகாண விவசாய அமைச்சு காணியைப் பொறுப்பேற்கவேண்டும் என்ற கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு, மக்களுக்குக் குறைந்த காணியும் இராணுவத்தினருக்குக் கூடிய காணியும் வழங்கப்பட்டன. இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட காணியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர்கள் பணியில் உள்ளனர். தற்போது, சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பணியாளர்களும் கிராமத்திலுள்ள சிலரும் இணைந்து இந்தக்காணியிலுள்ள தென்னை மரங்களில் இருந்து தேங்காய்களைக் களவாகப் பிடுங்கிச் செல்லுதல், இப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதாக இப்பகுதி மாதர் சங்க பிரதிநிதிகளால் தெரிவிக்கப்படுகின்றது. (ப-13)

## கனகாம்பிகைக்குளக் காணி தனிநபரால் ஆக்கிரமிப்பு

### தடுக்குமாறு பொதுஅமைப்புகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைக்குளத்தில் ஓர் ஏக்கர் பரப்பளவு காணி தனிநபரொருவரால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்படுகிறது. உரிய அதிகாரிகள் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச கமக்கார அமைப்பு உள்ளிட்ட பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கனகாம்பிகைக்குளத்தின் ஏ- 9 வீதியோடு அமைந்த பகுதி மண் நிரப்பப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் குளத்தை நம்பிசுமார் 300 வரையான சிறுதானிய பயிர்ச்செய்கையாளர்கள் உள்ளனர். இதுகுறித்து அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக குளத்தின் பல பகுதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படுகிறது.

எனவே இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ச-214-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

'ஒன்றிணைந்து வெல்வோம்' என்ற தொனிப்பொருளில் காலியில் நேற்று இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் கலந்துகொண்டார். இதன்போதே அவர், தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன், கட்டுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். நன்கு சிந்தித்த பிறகே தேர்தலில் போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டது. இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடும் நெருக்கடி நிலை இருந்தது. எவரும் முன்வராததால் தான் எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. எனினும், சவாலை நான் பொறுப்பேற்றேன்.

வரிசைகள் உருவாகின, மருத்துவமனைகளில் மருந்து இருக்கவில்லை. பாடசாலைகள் மூடப்பட்டன. இந்த நிலையில் நாட்டு மக்களின் துன்பம் போக்கவே அந்த சவாலை ஏற்றேன். இரண்டு வருடங்களில் நிலைமையை மாற்றியுள்ளேன். நான் சவால்களை கண்டு ஓடுபவன் கிடையாது. நான் அதிகம் பேசுவதும் கிடையாது.

ஆனால் ஒரு விடயத்தில் கைவைத்தால் அதனை வெற்றிகரமாக செய்து முடிப்பேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் உள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் நாம் செயற்பட வேண்டும். எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் நிபந்தனைகளும் உள்ளன. அவற்றின் பிரகாரமும் செயற்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ்தான் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட வேண்டியதில்லை எனக் கூறுபவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முற்படுபவர்களாவர்.' - என்றார். (அ-ம-44)

## மேலும்...

யில் ஈடுபட்டது. இதன் தொடர்ச்சியாக வே புலிகள் மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்புக்கு அமைய, தடைப் பட்டியலில் உள்ள அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு நிதி ஆதாரங்களை வழங்குவதோ அல்லது உதவுவதோ குற்றம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சும் இந்தத் தடையை உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

## 12,000 பேர்...

குழு நிர்ணயித்துள்ளது.

அதற்கமைய நேற்றுமுதல் நடைமுறைக்கும் வரும் வகையில் 12 ஆயிரம் அஞ்சல் பணியாளர்கள் தேர்தல் கடமைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பிரதி அஞ்சல் மா அதிபர் ரஞ்சித் கே. ரணசிங்க தெரிவித்தார். (அ-ச-இ)

## வெற்றிலை...

இந்தச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

ஆரம்ப கட்டவிசாரணையில் முன்பகை காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் நால்வர் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ச-27)

## பிரதிப்...

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்டவை சந்தித்து கலந்துரையாடியபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசமைப்பின்படி தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொலிஸ்மா அதிபருக்குத் தெரிவிக்க வேண்டும். பணிக்குத் தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறித்து பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிக்கவேண்டும். அதற்கமைய பொலிஸ்மா அதிபர் இன்றி தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட அனைத்து அரச அமைப்புகளுடனும் நாங்கள் சந்திப்புகளை மேற்கொண்டோம்,

அந்தவகையில் தேசபந்து தென்னக்கோன் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு கரவிட்டவை நியமித்தார். நாங்கள் அவருடன் இணைந்து பணியாற்றவுள்ளோம். அசங்க கரவிட்ட நியமிக்கப்பட்டுள்ளதால் அடிப்படை தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பிரச்சினை எழாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-ச-இ)

## புழல்...

தூத்துக்குடி கடலோர காவல் படையினர் மே மாதம் 18ஆம் திகதி கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில், மேற்படி 7 மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அனைவரும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி பரிந்துரையின் படி இராமநாதபுரம் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நீதிபதியால் நேற்று வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். (அ-ம-27)

## பிரதான...

குடும்பமொன்றின் மீது வன்முறை கும்பலொன்று வாள்வெட்டு தாக்குதலை நடத்தியதுடன், பெருமளவு வெளிநாட்டு நாணயம் மற்றும் பொருள்கள், நகைகள் என்பனவற்றையும் கொள்ளையடித்துச் சென்றது. குறித்த சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். எனினும் பிரதான சந்தேகநபரான 36 வயதுடைய பெண் தொடர்ந்தும் தலைமறைவாகவே இருந்தார். பரந்தன் பகுதியைச் சேர்ந்த அவர் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இரு தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், மேற்படி சந்தேகநபருக்கு வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பிருக்கலாம் என்ற ஐயப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தப் பெண்ணால் பாதிக்கப்பட்டவர்கள் என்று எவராவது இருப்பின் அவர்கள் தமது முறைப்பாட்டை வழங்க முடியும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-26)

## தமிழர்களின்...

வித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் காலியில் நேற்று நடைபெற்ற ' ஒன்றிணைந்து வெல்வோம் காலியில் நாம்' பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார், அவர் ஓடிவிடுவார் என சிலர் பரப்புரைகளைச் செய்தனர். தேர்தல் நடக்கும், அதில் ரணிலும் போட்டியிடுகின்றார். ஒரு வேட்பாளராகவே அவர் இந்த மேடையில் உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி உறுதி. இதில் மாற்றுக்கருத்து கிடையாது. பல கட்சிகள் இணைந்துள்ளன. விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் மேடையேறுவார்கள். வடக்கு- கிழக்கு அரசியல் சக்திகளும் ரணிலின் மேடைக்கு வரும். சவால்மிக்க நேரத்தில் நாட்டை பொறுப்பேற்காத சஜித்தால், பொருளாதாரத்தை மீட்க முடியுமா? அவர் வெற்றி வேட்பாளர் அல்லர். எமது மேடையிலேயே வெற்றிவாகை சூடப்போகும் வேட்பாளர் உள்ளார்' - என்றார். (ம-44)

## கறுப்பு....

கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 அரசியற் கைதிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவுகூர்ந்து அஞ்சலிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் என்.சிறிகாந்தா உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ,ம-20,125)

# வாக்குப் பதிவு விசேட வசதி

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தைத் தவிர மாற்று வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர்களுக்கு நியமிக்கப்பட்ட இடத்தில் வாக்களிக்க முடியாததற்கு நியாயமான காரணம் இருந்தால் மாற்று வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்குமாறு கோரலாம் என ஆணைக்குழுவின் வர்த்தமானி அறிவிப்பில் வலியுறுத்தியுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், அடுத்த மாதம் முதலாம் திகதி அல்லது அதற்கு முன், தேர்தல் ஆணைக்குழுவுக்கு படிவங்களை அனுப்ப வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விண்ணப்பமும் விண்ணப்பதாரரின் குடியிருப்புப் பகுதி கிராம அதிகாரிகளால் சான்றளிக்கப்பட வேண்டும், இல்லையெனில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. (ம)

# வன்முறை நிறைந்த ஆண்டாகியது 2023

## 488 கொலைகள் பதிவு

கொழும்பு, ஜூலை 28

கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில், வன்முறைகள் நிறைந்த ஆண்டாக 2023ஆம் ஆண்டு பதிவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய கணக்குத் தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த வருடத்தில் 488 கொலைகள் நிகழ்ந்துள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம)

# பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராக்கத் திட்டமாம்

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு திங்கட்கிழமை வெளிவரும் என்று ராஜபக்சக்களின் குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததோடு இந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பை இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர் செயற்பட்டார்.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள் மாத்திரமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளார்கள்.

இதற்கமைய பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராக களமிறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் காம்யோற்சவப் பெருவிழாவின் திருக்கைலாச வாகனத் திருவிழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ மாவைக் கந்தப் பெருமான் வெளிவீதி உலா வந்தார். (ச-25, 66)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும், பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன. (ப-17)



எழுதுமட்டுவாழ், கிளாலி புனித யாகப்பர் ஆலய வருடாந்த நவநாள் உற்சவம், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-9)






கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் விவசாய நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினை அம்மனுக்கு ஆடிப்பூர விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28
நயினாதீவு நாகபூசணி அம்பிகையின் ஆடிப்பூரவிழாவை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் விசேட அபிசேகமும் இலட்சார்ச்சனையும் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அம்பிகா உள்வீதி உலா வருவார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆடிப்பூர விழாவில் அடியார்கள் கலந்து கொண்டு அம்பிகையின் அருளாசியை பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ஒ-25)



# மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
கடற்கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபையும் மற்றும் எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த சதுப்பு நிலக் காடுளைப் பேணலின் அவசியத்தை எடுத்துக்காட்டும் வகையிலான வினாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வட்டு இந்துக் கல்லூரி சோமசுந்தரப்புலவர் அரங்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரபல உயிரியல் ஆசான் எஸ்.வி. விகுணசீலன், கடற்கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரி சதீஷ் மற்றும் எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகம் சார்பில் மனோகரன், சசிகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25,100)

# மயான அபிவிருத்தி சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
ஜே/228 தெல்லிப்பழைக் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கொத்தியாலடி இந்து மயானத்துக்கான மயான அபிவிருத்தி சபை உருவாக்குவதற்கான கூட்டம் தெல்லிப்பழை நூலகத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. மயானத்துடன் தொடர்புடையவர்களைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ச-25-66)

# சிறுவர் நூல்கள் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28
எழுத்தாளர் தேன்மொழி சபாவின் 'சிட்டுக் குருவியும் கிளிக் குஞ்சும்', 'மான்குட்டியும் தேரையும்', 'முட்டையில் இருந்து புறப்பட்ட குஞ்சுகள்' ஆகிய மூன்று சிறுவர் இலக்கிய நூல்களின் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் காலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.
ஓய்வுநிலை அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வாழ்த்துரைகளை பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் அதிபர் திருமதி அபிராமி சிவபவன், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபர் எம்.சி. சுதாகரன், ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.
மதிப்பீட்டுரைகளை சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் ஆசிரியர் திருமதி இந்துமதி யாதவன், பாரி அறக்கட்டளையின் தலைவர் ச.நிகேஸ், ஏற்புரையை நூலாசிரியர் தேன்மொழி சபா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி 13 தினங்கள் இடம்பெறவுள்ளன.
மஹோற்சவத்தின் 8 ஆம் திருவிழாவாக ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், ஓகஸ்ட் 5 ஆம் திகதி சப்பரத திருவிழாவும், ஓகஸ்ட் 6 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், ஓகஸ்ட் 7 ஆம் திகதி தீர்த்த திருவிழாவுடன் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.
ஓகஸ்ட் 8 ஆம் திகதி இளைஞர் திருவிழாவாக பூங்காவனம் இடம்பெற்று, இரவு தெப்பத் திருவிழா நடைபெறவுள்ளது. (ப-100)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 78 ஆவது ஆண்டு நிறைவு விளையாட்டுவிழா நிலையத்தின் தலைவர் ம.அச்சுதனின் ஏற்பாட்டில், கலைமகள் விளையாட்டுக்கழகத் தலைவர் அ.ஆருஜன் தலைமையில் நிலைய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் அ.ஆதவன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-25)




# பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை மாகாணமட்ட ஹொக்கியில் சாதனை!

யாழ்ப்பாணம், ஜூலை 28
மாகாணமட்ட ரீதியில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையானது முதலாவது இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.
இறுதிப் போட்டியானது, யாழ்ப்பாணக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது. 20 வயதின் கீழ் பெண்களுக்கான இறுதிப்போட்டியில் ஏழு பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றின. வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தை வீழ்த்தி பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை வெற்றிபெற்றது. (ப-27)

# 'கழுகுகள்' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 28
பிரித்தானியா வாழ், வேணி சதீஸின் 'கழுகுகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா, யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் பணியாளர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மனஸ்தாபம் நீங்கும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணபதியை வழிபட தடைகள் விலகும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டு. அலைச்சல் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சாதுர்யமாகச் சமாளித்துவிடுவீர்கள்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பைரவரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். செலவு செய்யவேண்டி வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு.

**மகரம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். அறிவுரை பயனுள்ளதாக இருக்கும். ஆஞ்சநேயரை வழிபட அல்லல்கள் குறையும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ட்ரூடோவைப் பார்த்து குரைக்கும் கொழும்பு

*1983* ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலைப் படுகொலைகளுக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்றும், அதற்காகத்தான் குரல்கொடுப்பதை ஒருபோதும்நிறுத்தப்போவதில்லை என்றும் அறிவித்திருக்கின்றார் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ. பிரதமர் ட்ரூடோ ஈழத்தமிழர்களுக்கு எதிரான துன்பியல்களுக்காக கொழும்பை பொறுப்புக்கூற வலியுறுத்துவதும், அவருடைய கூற்றுகளைக்கண்டு 'மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்பாக' கொழும்பு திமிறியெழுவதும் வழக்கமானதுதான். இதன் தொடர்ச்சியாகவே பிரதமர் ட்ரூடோவின் இந்த வருட அறிவிப்பையும் கொள்ளலாம்.

ட்ரூடோ - கொழும்புக்கு இடையிலான இந்த மோதலில், இந்த வருடத்தின் புது அறிமுகமாகியிருக்கின்றார் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரான உமாகுமாரன். 'ஜூலைக் கலவரங்களும், அதன்மூலம் தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்ட துன்பியல்களும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும். 41 ஆண்டுகளாக கறுப்பு ஜூலைக் கலவரத்தின் பின்னரான நீதிக்காகக் காத்திருக்கும் தமிழ்ச் சமூகத்துக்கு நாம் துணையிருப்போம்' என்று அறிவித்திருக்கின்றார் அவர். தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டுமாயின், வெறுமனே அறிக்கைகள் மூலமோ அல்லது உள்நாட்டுக் குடுமிபிடிச் சண்டைகள் மூலமோ அது சாத்தியமே இல்லை. சர்வதேசப் பிடிமானங்கள் இல்லாமல் எந்தவொரு நீதியும், குற்றவாளிகளுக்கான தண்டிப்புகளும் இன்று வாய்க்கப்போவதில்லை என்ற நிலையில், தங்களுக்கான ஆதரவுத் தளத்தை ஒரணிப்படுத்த வேண்டியதும் பலப்படுத்த வேண்டியதும் தமிழர்கள் முன்னுள்ள பெரும் பொறுப்பாகவே காணப்படுகின்றது. ஆனால், அந்த வாய்ப்பை தமிழர் தாயகம் காலாகாலமாகத் தவறவிட்டுக்கொண்டே வந்திருக்கின்றது. தற்போதும்கூட இந்த வரலாற்றுத் தவறில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எங்களின் தமிழ்த் தேசியக்கட்சிகளின் தலைவர்கள் எத்தனிக்கவில்லை என்பதே கசப்பான உண்மை.

கனேடியப் பிரதமர் ட்ரூடோவின் கருத்துகளை கொழும்பு திட்டவட்டமாக மறுத்துள்ளது. 'ட்ரூடோ கனேடியத் தமிழர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டு தேர்தல் நோக்கத்தில் இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்' என்றுள்ளது கொழும்பு. 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் செறிந்துவாழும் சென். போல்ஸ் தொகுதியை ட்ரூடோ தரப்பினர் இழந்துள்ள நிலையில், ட்ரூடோவின் தோல்வி, தேர்தலை மையப்படுத்திய குற்றச்சாட்டுகளை முன்வைக்க கொழும்புக்குச் சில பிடிமானங்களைக் கொடுத்துள்ளது என்பது உண்மைதான். ஆனால், ட்ரூடோவின் கருத்துகள் தேர்தலை மையப்படுத்தியவை அல்ல என்று அவருக்கு பெருமெடுப்பில் ஆதரவை வழங்க வேண்டிய தார்மீகக் கடமை இங்குள்ள தமிழ்த் தேசியத் தலைமைகளுக்கு உண்டு. அதை எங்களின் அரசியல் தலைவர்கள் செய்ததாக இல்லை. சர்வதேசத்தில் எமக்கு ஆதரவாக எப்போதெல்லாம் ஒரு பொறி தெரிகின்றதோ, அதை வியாபிக்கச் செய்யவும், தீவிரமாகப் பற்றவைக்கவும் தமிழ்த் தலைமைகள் முன்வரவேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேவை இன்று உணரப்படுவது ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அல்ல. மாறாக எங்களின் விருப்பங்கள், அபிலாஷைகள் வேறு என்பதை உலகறியச் செய்வதற்காகத்தான். அதை உலகமே வெளிப்படுத்தும்போது வாய்ப்பைப் பயன்படுத்தாதிருப்பது சுத்த அபத்தம்.



# நாடாளுமன்றமும் நீதிமன்றமும் முட்டிமோதுவதை தவிருங்கள்!

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 28**

**பொலிஸ்மா அதிபர் விடயத்தில் நாடாளுமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் மோதலை ஏற்படுத்த முற்படுகிறார்கள். இதன் பயங்கரமான நிலையை புரிந்துகொண்டு சபாநாயகர் அதற்கு இடமளிக்கக்கூடாது.**

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் பிரதமரின் விசேட உரைக்கு பதிலளிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பு பேரவை நாடாளுமன்றத்தின் ஒரு பகுதி என்ற கருத்தை பிரதமர் தெரிவிக்கிறார். ஆனால் இந்தச் சபையில் ஜனாதிபதி இதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று துறையின் ஒரு பகுதி என விவாதித்திருந்தார். அதனால் தங்களுக்கு தேவையான முறையில் இதற்கு பொருள்கோடல் தெரிவிப்பதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசமைப்பு பேரவையின் தலைவராக சபாநாயகர் எடுத்த தீர்ப்பொன்றை சவாலுக்குட்படுத்தியே குறித்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. உங்களைப் பழிக்கடாவாக்கிக்கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் தனக்குத் தேவையான பொலிஸ்மா அதிபரை வைத்துக் கொண்டு ஏதாவது சதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவே ஜனாதிபதி முயற்சிக்கிறார். அதற்கு நீங்கள் இடமளிக்க வேண்டாம் - என்றார். (ச-இ)

# எங்கள் வேட்பாளர் விஜயதாஸ அல்லர்

## தயாசிறி தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்குவதற்கு இதுவரையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. விஜயதாஸ ராஜபக்சவை எமது கட்சியின் வேட்பாளராக நாம் முன்னிலைப்படுத்தவில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்குவதற்கு இதுவரையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. யாரை முன்னிலைப்படுத்துவது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது. நாடு மற்றும் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பொருத்தமானதொரு தீர்மானத்தை எடுப்போம். - என்றார். (ச-இ)

# 4 பேர் கட்டுப்பணம்

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 4 வேட்பாளர்கள் நேற்று முன்தினம் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது. (ஒ-இ)

# பாதுகாப்பை பலப்படுத்தவும்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள் ளார். (ஒ-இ)

# படையெடுக்கும் சுற்றுலாவிகள்!

கொழும்பு, ஜூலை 28

இந்த மாதம் 15 ஆம் திகதி 10 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதையடுத்து இலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மீண்டும் எழுச்சியடைந்துள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனாத் தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் சுற்றுலா வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. முறையான வேலைத்திட்டத்தினால் தற்போது வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## நாளை

29.07.2024

திங்கட்கிழமை - ஆடி - 13

சுபநேரம் : 12.03 - 01.33

ராகுகாலம் : 07.33 - 09.03

## நாளொரு நல்வார்த்தை

**மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.**

*- மாத்யூஸ் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனையாளர் கௌரவிப்பும் சின்னம் சூட்டும் நிகழ்வும்!

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பும், மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் அதிபர் க.உமாபாலன் தலைமையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரட்ண, கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சோ.ஶ்ரீகாந்தன், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் க.சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக பழைய மாணவி திருமதி கோபிகா மதீஷன் ,ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஒ-22,159)



வடமாகாண மட்ட முஸ்லிம் கலை கலாசாரப் போட்டியில் அஸ்மா உல் ஹுஸ்னா நிகழ்வில், முதலாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய உயர் தர மாணவி என்.எவ். நாசிக்கா தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ப-159)



# ஒலிம்பியாட் போட்டி கௌரவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 28

மாந்தை கிழக்கு, பாலியாறு மகா வித்தியாலய மாணவன் ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தரம்-6 இல் கல்வி கற்கும் ஆனந்த பிரசாத் றகிநாத் விசேட சித்தி பெற்றமைக்காக கடந்த புதன்கிழமை பாடசாலையில் வைத்துக் கௌரவிக்கப்பட்டார். (ப-13)



கிளிநொச்சி தெற்கு வலய தமிழ் மொழித் தின கலைத்திறன் போட்டியில் தனியிசை கர்நாடக சங்கீதம் பிரிவு4 இல் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவியான பங்கயற்செல்வன் நர்த்தகி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ப-13)





கிளிநொச்சி, திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு, பாடசாலை சமூகத்தால் 'ஆரோக்கியத்தை பேணுவோம்' என்ற தொனிப்பொருளில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.(ப-113)



# ஆடிக்கூழ் நிகழ்வு!

கிளிநொச்சி , ஜூலை 28

முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் ஆடிப் பிறப்பு ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு அதிபர் பா.சதீஸ் தலைமையில் கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் மரக்கன்றுகளும் பாடசாலை வளாகத்தில் நடப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக கிளி . முழங்காவில் மகாவித்தியாலய பிரதி அதிபர்களான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, திருமதி பிரமிளா தங்கரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-22,159)

மன்னார், ஜூலை 28

இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே விவாத போட்டி, அண்மையில் நடத்தப்பட்டது.

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டங்களிலிருந்து மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் மூலம் பயனடைந்த பாடசாலை மாணவர்கள், இவ்விவாத போட்டியில் பங்குபற்றினர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் முதலாவது சுற்றில் பங்குபற்றி 2 ஆவது சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விவாதப் போட்டி, முருங்கனில் அமைந்துள்ள ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

2 ஆம் சுற்றில் பங்குபற்றிய 6 அணிகளில் தலைமன்னார் அ.த.க.பா., மன்னார் பரிகாரி கண்டல் அ.த.க.பா. மற்றும் மன்னார் கட்டையடம்பன் றோ.க.த.க.பா. ஆகிய மூன்று பாடசாலையின் அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டன.

இதன்போது, போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாவசிய அழைப்பில் வங்கிப்பணம் பறிப்பு!

## மக்களே அவதானம்

யாழ்ப்பாணத்தில் தற்போது வங்கி மோசடிகள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் தங்களின் தொலைபேசிக்கு வரும் அநாவசிய அழைப்புகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் வணிகர் கழகம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

பல்வேறு மோசடிகளால் பலருடைய வங்கிக் கணக்குகளில் இருந்து பெருமளவிலான பணம் திருடப்பட்டு வருகின்றது. தற்போது மக்கள் தொலைபேசிக்கு அநாவசியமான அழைப்புகள் மூலம் தங்களை ரெலிக்கொம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என அறிமுகம் செய்கிறார்கள்.

பின்னர் நம்பும்படி உரையாடி வங்கி இலக்கத்துக்கு பரிசு கிடைத்துள்ளதென வங்கி இலக்கத்தையும் கைத் தொலைபேசிக்கு வரும் ஒரு தடவை மட்டும் பாவிக்கும் கடவுச்சொல்லையும் கேட்கிறார்கள். அதனைக் கூறியவுடன் வங்கிக் கணக்கிலுள்ள பணம் களவாடப்படுகிறது.

குறுகிய காலப்பகுதிக்குள் அதிகளவிலான மோசடிகள் இவ்வாறு நடந்துள்ளதாக வங்கி முகாமையாளர்களால் கூறப்படுகிறது. இதுதொடர்பில் அனைவரும் மிகவும் அவதானமாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும் - என்றுள்ளது.

(அ-ச-155-555)




ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?


அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
திருமதி வே. மோகனதாஸ்
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 241 1234, 021 221 1239
### இசை வாத்தியங்கள் வாங்கப்படும்

மேலைத்தேய மற்றும், கீழைத்தேய அனைத்து விதமான பாவித்த மற்றும் புதிய இசை வாத்தியங்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு:- 077 676 4768

(CS/55755) J-1

### வீடு வாடகைக்கு

கைதடி - மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில்) அமைந்துள்ள சகலவசதிகளுடன்கூடிய மேல்மாடி வீடு (3000 சதுர அடி) வாடகைக்குண்டு. வாகன தரிப்பிட வசதியும் உண்டு. அலுவலக பயன்பாட்டிற்கு உகந்தது.

077 115 5909
Whatsapp: + 9477 1155 909

(cs.55741) (N-1)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி பெரிய பரந்தன் A9 வீதிக்கு அருகாமையில் அரை ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

076 314 3387

(CS/55630) J-1

### வீடுகள் வாடகைக்கு உண்டு

பருத்தித்துறை வீதி இருபாலைச்சந்தி, பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் அமைந்துள்ள **வீடுகள் வாடகைக்கு உண்டு.**

077 306 8993, 077 711 3861

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு கணக்காளர், உதவியாளர், களஞ்சியக் காப்பாளர், விற்பனைப் பிரதிநிதி, வாகன சாரதி, உதவியாளர் தேவை. யாழ் மாநகர சபைக்குள் விரும்பத்தக்கது.

076 561 5492, 070 511 5335

### பணியாளர் உடன் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) சமையலாளர் :- இந்தியன் உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (தகுந்த சம்பளம் வழங்கப்படும், வயது எல்லை : 20-55)

2) தோட்டப் பராமரிப்பாளர் :- இத் துறை சார்ந்த அனுபவம் விரும்பத்தக்கது. (வயது எல்லை : 20-50)

3) துப்புரவு பணியாளர் :- (வயது எல்லை : 20-50)

சமூகம் தரவேண்டிய முகவரி

195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 195, Temple Road, Nallur, Jaffna

தொடர்புகளுக்கு: 0772514984,0778729806




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆடி 12 | ஞாயிற்றுக்கிழமை (28.07.2024) | சிகரம் :212

பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையோடு புனைதேர் பண்ணவும்,
அறனோ மற்றஇது விறல்மாண் குடுமி!
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு,
இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே?

— நெட்டிமையார்

# தாங்கள் யாரென்பதை தமிழ்மக்கள் காட்டுவார்கள்

○ நிலாந்தன்

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் சுவர்களில் ஓர் அநாமதேயச் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. அதில் "தேசமே பயப்படாதே" என்று வெள்ளைப் பேப்பரில் சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்தது. யார் யாருக்குப் பயப்படக்கூடாது என்று யார் கூறுகிறார்கள்?

இந்தச் சுவரொட்டி ஒட்டப்படுவதற்கு முன்பு, ஜே.வி.பி. ஒரு பெரிய பலவண்ணச் சுவரொட்டியை ஒட்டியது. அதில் "எங்கள் தோழர் அநுர" என்று எழுதப்பட்டிருந்தது. அநுரவின் பெரிய முகம் அதில் பதிக்கப்பட்டிருந்தது. அதற்கும் சில நாட்களுக்கு முன்பு "நாங்கள் தயார்" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு சுவரொட்டி. அதுவும் பலவண்ணச் சுவரொட்டி. அதில் தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்களில் ஈடுபட்ட தலைவர்கள் மூவருடைய படங்கள் காணப்பட்டன. அதற்குக் கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்பு ஒரு சுவரொட்டியில் நற்செய்தி வருகிறது என்ற பொருள்பட எழுதப்பட்டிருந்தது. அது ஒட்டப்பட்ட அடுத்த நாள் 'ரணில் செய்வார் 'என்று இன்னொரு சுவரொட்டி வந்தது. சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்த கட்ட கடன் உதவிக்கான பேச்சுகள் வெற்றி பெற்றிருந்த ஒரு பின்னணியில் ஜனாதிபதி நாட்டுக்கு உரை நிகழ்த்தவிருந்தார். அதை முன்னிட்டு அந்தச் சுவரொட்டிகள் வெளிவந்தன. இந்தக்கட்டுரை எழுதப்படுகையில் ஒரு சுவரொட்டி சில நாட்களுக்கு முன் ஒட்டப்பட்டது. அதில் "ரணிலை விரட்டுவோம்" என்று கறுப்பு வெள்ளையில் எழுதப்பட்டுள்ளது.

நிச்சயமாக மேற்கண்ட சுவரொட்டிகள் யாவும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி ஒட்டப்பட்டவை. இவ்வாறு யாழ்ப்பாணத்தின் சுவர்களில் வண்ணவண்ணச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கும் தென்னிலங்கை மையக் கட்சிகள், யாழ்ப்பாணத்து மக்களின் மனங்களில் என்ன ஒட்டப்பட்டு இருக்கிறது என்பதனை அறிந்திருக்கிறார்களா? தென்னிலங்கைக் கட்சிகள் மட்டுமல்ல, அந்தக் கட்சிகளுக்கு தமிழ்மக்களின் வாக்குகளை மடைமாற்ற முயற்சிக்கும் தமிழ் முகவர்கள், தமது சொந்த மக்களின் மனங்களில் எந்தக் கனவு ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதனை அறிந்திருக்கிறார்களா?

தமிழ்மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நிர்ணயகரமான தருணங்களில் கொள்கைகளுக்கு வாக்களித்திருக்கிறார்கள். கொலனித்துவ ஆட்சிக்காலத்தில், இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட பின் நடந்த முதலாவது பொதுத் தேர்தலில், 1931ஆம் ஆண்டு தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அப்பொழுது இருந்த யாழ்ப்பாண வாலிபக் காங்கிரஸ் மகாத்மா காந்தியின் செல்வாக்குக்கு உட்பட்டு தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுத்த கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அங்கிருந்து தொடங்கி தமிழ்மக்கள் நிர்ணயகரமான தேர்தல்களில் நிர்ணயகரமாக முடிவெடுத்து வாக்களித்திருக்கிறார்கள். மிகப்பலமான உயர்குழாத்தைச் சேர்ந்த சேர்.பொன். ராமநாதன் குடும்பத்தின் வாரிசு ஆகிய மகாதேவாவை ஜி.ஜி.பொன்னம்பலம் 1947ஆம் ஆண்டு "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று கூறித்தோற்கடித்தார். அதே பொன்னம்பலத்தை பின்னர் கொள்கையின் பெயரால் செல்வநாயகம் தோற்கடித்தார். பின்னர் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் போதும் தமிழ்மக்கள் கொள்கைக்கு வாக்களித்தார்கள். அதன்பின் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைத் தீவில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ்மக்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்ட ஈரோசுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்கள். இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் ஒரு சுயேச்சைக் குழு 13ஆசனங்களை வென்றமை அதுதான் முதல்தடவை. அந்த வெற்றி தமிழ்மக்களின் போராட்டத்தின் விளைவு. தமிழ்மக்கள் கொள்கைக்கு வாக்களித்தார்கள். அதன் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டு உருவாக்கப்பட்ட பின் நடந்த முதலாவது தேர்தலில், தமிழ்மக்கள் திரண்டு வாக்களித்திருக்கிறார்கள். அதாவது போராட்டத்தின் விளைவாக தோன்றிய கூட்டமைப்புக்கு கொள்கை அடிப்படையில் வாக்களித்தார்கள். 22ஆசனங்களை அள்ளிக்கொடுத்தார்கள். ஏன் அதிகம் போவான்? கடந்த 15 ஆண்டுகளிலும் ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ்மக்கள் எப்படி வாக்களித்தார்கள்? தங்களைத் தோற்கடித்த குடும்பத்துக்கு எதிராக பெருமளவுக்கு ஒன்றுபட்டு வாக்களித்தார்கள்.



எனவே தமிழ்மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதிலும் ஆகக்கூடியபட்சம் ஒருபெருந்திரளாகத் திரண்டு ஒன்றுபட்டு வாக்களித்த பல தருணங்கள் உண்டு. ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்து வாக்களித்த தருணங்கள் பல உண்டு. ஆனால், கடந்த 15 ஆண்டுகளிலும் அவர்கள் ஜனாதிபதித் தேர்தல் அல்லாத ஏனைய தேதல்களில் வாக்காளர்களாக சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதனால் அவர்களை மீண்டும் ஒரு பெரிய மக்கள் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் திரண்டுவந்து வாக்களிக்க மாட்டார்கள் என்று புள்ளி விவரங்களைக் காட்டிப் புலம்புவர்களும் பயமுறுத்துவோர்களும் ஒன்றை விளங்கிக்கொள்ளவேண்டும். கட்சி அரசியல் என்பது ஆகக்கூடிய பட்சம் வாக்குகளைத் திரட்டுவதுதான். அதிலும் குறிப்பாக தேசியவாதக் கட்சி அரசியல் என்றால், மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. அதைச் செய்யாத அல்லது செய்யமுடியாத அரசியல்வாதிகள் பொது வேட்பாளருக்கு வாக்குகள் கிடைக்காது என்று பயமுறுத்தப் பார்க்கிறார்கள். அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு மட்டுமல்ல கட்சி அரசியலுக்கே லாயக்கில்லாதவர்கள். தமிழ்மக்களை வாக்காளர்களாகச் சிதறடித்ததில் அவர்களுக்கும் பொறுப்புண்டு.

எனவே, தமிழ்ப்பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாடு தமிழ்மக்களை ஒன்றாக்குவது. தமிழ்ப் பலத்தை ஒன்று திரட்டுவது. தமிழ் அரசியல் சக்தியை ஒரு மையத்தில் குவித்து ஆகக்கூடியபட்சம் ஆக்க சக்தியாக மாற்றுவது.

இந்த அடிப்படையில்தான் கடந்த திங்கட்கிழமை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்டது. ஏழு தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும், மக்கள் அமைப்பாகிய "தமிழ்மக்கள் பொதுச்சபை" க்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அது. அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இரண்டு முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவது முக்கியத்துவம், கட்சிகளும் மக்கள் அமைப்பொன்றும் அவ்வாறு ஓர் உடன்படிக்கையை எழுதிக்கொள்வது நவீன தமிழ் வரலாற்றில் அதுதான் முதல் தடவை.

தமிழ்மக்கள் பொதுச்சபையெனப்படுவது தமிழர் தாயகத்தில் உள்ள குடி மக்கள் சமூகங்கள்; செயற்பாட்டு அமைப்புக்கள்; மக்கள் அமைப்புக்கள் என்பவற்றின் கூட்டிணைவாக உருவாக்கப்பட்ட, ஒப்பீட்டளவில் பெரிய ஒரு மக்கள் கட்டமைப்பாகும். அந்த மக்கள் அமைப்பு, ஏழு தமிழ்த்தேசியக் கட்சிகளோடு எழுதிக்கொண்டஓர் உடன்படிக்கை அது.

அந்த நிகழ்வில் உரையாற்றிய விக்னேஸ்வரன் கூறினார், வாக்களித்த மக்களும் அந்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்களும் எழுதிய உடன்படிக்கை அதுவென்று. உண்மையில் இரண்டும் இரு வேறு தரப்புகள் அல்ல. இரண்டுமே, ஒன்று மற்றதை இட்டு நிரப்பிகள்தான். ஆனால் அவ்வாறான இட்டு நிரப்பிகள் தங்களுக்கு இடையில் ஓர் உடன்படிக்கை எழுதவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? ஏனென்றால் கட்டமைப்பு ரீதியாக இயங்குவது என்று முடிவெடுத்து எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை அது. ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்ட உடன்படிக்கை அது.

இரண்டாவது முக்கியத்துவம், தமிழ்ப்பொதுவேட்பாளர் என்ற விடயம் கட்டமைப்பு ரீதியாக முன்நகரத் தொடங்கியுள்ளது என்று பொருள். கடந்த 15 ஆண்டுகளாக ஒரு கருத்துருவாக்கமாக, சில கட்சிகளின் நடவடிக்கையாக, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ்மக்கள் பேரவையின் சுயாதீனக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டு, இடையில் கைவிடப்பட்ட ஓர் அரசியல் நகர்வாகக் காணப்பட்ட ஒன்று, இப்பொழுது கட்டமைப்பு சார்ந்து அடுத்த கட்டத்துக்கு நகரத் தொடங்கியிருக்கின்றது. இது மிக முக்கியமானது. தமிழ்மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ்ப் பொது வாழ்வில் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கும் பாரம்பரியம் பலவீனமாக உள்ளது. கட்சிகளுக்குள் உரிய பொருத்தமான

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளராக பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக பதவி வகித்த மஹிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளராகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்த எம்.எம்.மொஹமட் இருவரும் உதயன் பணிமனைக்கு அண்மையில் வருகை தந்தனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரபரப்புக்களுக்கு மத்தியில் உதயன் - சஞ்சீவி வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.



# மாகாணசபைத் தேர்தல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளது

# உள்ளூராட்சித் தேர்தலோ சூறையாடப்பட்டுவிட்டது!

## மஹிந்த தேசப்பிரிய ஆதங்கம்

சந்திப்பு - டிலீப்அமுதன்

**கே: இரண்டு ஜனாதிபதித் தேர்தல்கள் மற்றும் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள் உட்பட பல தேர்தல்களை வெற்றிகரமாக தங்கள் தலைமையில் நடத்தி முடித்திருந்தீர்கள். ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழுவிலிருந்து நீங்கள் விலகிய பின்னர் நாடு எதிர் கொண்ட உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தேர்தல் ஒத்திவைப்புத் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளராக தங்களது நிலைப்பாடு என்னவாக இருக்கின்றது?**

ப: எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைப்பது குற்றம். நிதி இல்லை என்பதைக் காரணம்காட்டி இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தால் வரவு- செலவுத் திட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட நிதியை விடுவிக்கும் அதிகாரம் திறைசேரியின் செயலருக்குரியது. நிதி விடுவிக்கப்படாமைக்கு குற்றம் சுமத்தப்படவேண்டியவர் நிதி அமைச்சின் செயலர்.

மற்றைய பக்கம், அரசியல்வாதிகள், உள்ளூராட்சிக்கு வேட்புமனுத்தாக்கல் செய்த வேட்பாளர்கள், மக்கள் கூட இதைப்பற்றி அக்கறை செலுத்தாமையும் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்குக் காரணம்.

இப்பொழுது இலங்கையில் உள்ள நிலைமையைப் பாருங்கள். மாகாணசபைகளை எடுத்துக்கொண்டால் அரசாங்கத்தால் - ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட ஆளுநர் என்ற அதிகாரிகள்தான் அதனை நிர்வகிக்கின்றார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. மாகாணசபைத் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்திலுள்ள தொழில்நுட்பக் குறைவால்தான் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. உயர் நீதிமன்றம் கூட அதை நாடாளுமன்றம்தான் தீர்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பது வேறு காரணத்தால். நிதி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைவாக நிதியை விடுவிக்க முடியாது என்று அதிகாரி ஒருவர் கூறியமையாலேயே உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளை அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் நிர்வகிப்பதற்கு எதிராக தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில் 2016ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இருக்கின்றது. அதிகாரிகளால் உள்ளூர் அதிகாரசபைகள் நிர்வகிக்கப்படுவது தவறானது என்றுதான் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீங்கள் எழுப்பிய கேள்விக்கு, உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை குற்றம் என்பது மாத்திரமல்ல நீதிமன்ற அவமதிப்பும்கூட என்பதுதான் பதில். எனது பார்வையில், மாகாணசபைத் தேர்தல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் சூறையாடப்பட்டிருக்கின்றது.

**கே: நீங்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக இருந்திருந்தால் இந்த விடயத்தை எப்படிக் கையாண்டிருப்பீர்கள்?**

ப: நான் இருந்திருந்தால், யாழ்ப்பாணம் மாவட்டம் என்பது அதிகளவான உள்ளூராட்சி சபைகளைக் கொண்டிருக்கின்ற மாவட்டம். ஆனால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய குறைந்தளவு உள்ளூராட்சிசபைகளைக் கொண்டிருக்கின்ற மாவட்டங்கள். எனவே குறைந்தளவு நிதி விடுவிக்கப்படும்போது, குறைந்தளவு உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்டுள்ள மாவட்டங்களிலாவது முதலில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்திருப்பேன். இதேவேளை, இதற்குக் கூட அரசாங்க அச்சகர் ஒத்துழைப்பு வழங்குவாரா என்ற ஐயப்பாடு அப்போதிருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருந்தது. அதேநேரம், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டமையும் எல்லோருக்கும் நேரத்துடனேயே தெரிந்திருந்தது. எனவே அரசாங்க அச்சகருடன் கலந்துபேசி, ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போன்று குறைந்தளவு உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்டுள்ள மாவட்டங்களிலாவது நடத்தி முடித்திருக்கலாம். இந்தத் தேர்தலை நடத்த முடியாமையிட்டு மிகவும் மனம் வருந்தியவர்கள், அப்போதிருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் 4 பேரும்தான். ஆனாலும் இன்னொரு விடயத்தை நான் தெளிவுபடுத்துகின்றேன். நான் ஆணைக்குழுவின் தவிசாளராக அந்தச் சந்தர்ப்பத்தில் இருக்கவில்லை. நான் களத்தில் துடுப்பெடுத்தாடாதபோது பந்து எப்படி வீசப்படுகின்றது என்பதை என்னால் கணிக்க முடியாது. எனவே நான் எப்படித் துடுப்பெடுத்தாடியிருப்பேன் என்பதை துல்லியமாகச் சொல்லமுடியாது. இருப்பினும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்த 4 உறுப்பினர்களை வைத்து அந்தக் காரியத்தை நானிருந்திருந்தால் சாதித்திருப்பேன்.

**கே: அப்படியாயின் நாடு ஒரு பொருத்தமான அல்லது தேவையான தேர்தல் ஆணைக்குழு தவிசாளரை அநியாயமாக இழந்துவிட்டதா?**

ப: அப்படிச் சொல்ல முடியாது. எனது காலம் முடிந்து விட்டது. நான் 37 ஆண்டுகள் தேர்தல்கள் திணைக்களத்தில் பணியாற்றிருக்கின்றேன். செய்யவேண்டியவற்றை நான் செய்திருக்கின்றேன். எமது நாட்டின் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அமைப்பு முறைமைக்கும், இந்தியாவின் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முறைமைக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. இந்திய தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஒரேயடியாக எல்லோரும் வெளியேறுவதில்லை. அங்கே யார் முதலில் 65 வயதைப் பூர்த்தி செய்கின்றாரோ அவர் வெளியேறுவார். ஏனையோர் தொடர்ந்தும் இருப்பார்கள். ஆனால் இங்கே அப்படியல்ல. தேர்தல்கள் ஆணைக்குழுவின் காலம் முடிந்ததும் எல்லோரும் ஒரேயடியாக வெளியேற்றப்படுவார்கள். இந்தியத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் தொடர்ச்சி இருக்கும். அது இலங்கையில் இல்லை. தொடர்ச்சித்தன்மை இல்லாமை ஒரு பின்னடைவே.

**கே: உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு அது ஒத்திவைக்கப்பட்டுள்ள சூழலில், தேர்தல் சட்டம் நடைமுறையில் உள்ளதாக எடுத்துக் கொள்ள முடியுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: உள்ளூராட்சித் தேர்தலின்போதான அரசவளங்களின் துஷ்பிரயோகம் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய பணிப்புரைகள் இன்னமும் நடைமுறையில் இருக்கின்றன என தேர்தல்கள் ஆணைக்குழுவால் அண்மையில் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருகின்றது. தேர்தல் சட்டம் நடைமுறையில் இருப்பதால், அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள்கூட தேர்தல்கள் ஆணைக்குழுவால் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. தேர்தல் முறைப்பாடுகள் கையேற்பு பிரிவின் நடவடிக்கை மாத்திரம் மென்மையாக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

**கே: உள்ளூராட்சித் தேர்தல் சட்டம் நடைமுறையில் இருக்கின்றதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் ஊடான திட்டங்கள், ஜனாதிபதியின் அபிவிருத்தித் திட்டங்கள் என அரசவளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தேர்தல் விதிமுறை மீறலாக எடுத்துக்கொள்ளலாமா?**

ப: அபிவிருத்திப் பணிகள், வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோருக்கான உதவிகளை ஒரேயடியாக நிறுத்தவேண்டும் எனச் சொல்ல முடியாது. ஆனால் இவற்றின் ஊடாக ஒரு வேட்பாளர், கட்சி அரசியல் ஆதாயம் அடையுமிடத்து. இன்னொரு வேட்பாளரோ, கட்சியோ பாதிப்படைந்தால் அந்தச் சந்தர்ப்பத்தில் இது தடுக்கப்படவேண்டும்.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் மக்களுக்கு நிறைய பொருளுதவிகளை வழங்கினார். ஆனால் அவரால் அந்தத் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை. வெற்றி பெற முடியவில்லை என்பதற்கு அப்பால் அந்தக் கட்சியின் விருப்பு வாக்குப் பட்டியலில் கூட முன்னிலைக்கு வரமுடியவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழுவில் நான் கடமையாற்றிய காலத்தில் இதனைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தேன். 'இந்த அபிவிருத்திப் பணிகள் - நிவாரணங்கள் -உதவிகள் வழங்கப்படுவது உங்களின் வரிப்பணத்திலிருந்தே' என்ற பதாகையை நாம் காட்சிப்படுத்தினோம். அது

அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற இடம், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அந்தப் பதாகைகளை காட்சிப்படுத்தினோம். அவ்வாறு பதாகையை காட்சிப்படுத்தியதன் ஊடாக இந்த அபிவிருத்திப் பணிகளால் குறிப்பிட்ட அரசியல்தரப்புக்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என்பதை மக்களுக்குச் சொன்னோம்.

**கே: தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் நடைபெறப்போகும் முதலாவது தேர்தலாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அமையக் கூடும். இந்தச் சட்டத்தின் பிரயோகம் தொடர்பில் மக்கள் அல்லது சிவில் சமூகப் பிரதிநிதிகள் கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் எவை? இந்தச் சட்டத்தால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும்?**

ப: இது இலங்கைக்கு புதியதல்ல. தேர்தல் செலவினச் சட்டம் அதை ஒழுங்குபடுத்தும் பகிரங்க அதிகாரசபையைக் கொண்டிருக்கவில்லை. தேர்தல் செலவு தொடர்பான வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை சேகரித்து மக்களுக்கு வெளியிடும் பணியையே தேர்தல்கள் ஆணைக்குழுவால் முன்னெடுக்க முடியும். இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டுமாக இருந்தால் அது பொலிஸ் திணைக்களத்தாலேயே முடியும். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிக செலவு செய்திருந்தால் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் திணைக்களத்திடமே முறையிட முடியும். பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

பொதுமக்கள் தேர்தல் செலவு தொடர்பான முறைகேடுகளை அவதானித்து அவர்களும் முறைப்பாடுகளைச் செய்ய முடியும். இதற்கான கால அவகாசம் 11 நாள்கள் மாத்திரமே. தேர்தல் நிறைவடைந்து 21 நாள்களுக்குள் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், சுயேச்சைக் குழுக்கள் தங்களது செலவு விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும். அதிலிருந்து 10 நாள்களுக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு அதைப் பகிரங்கப்படுத்தவேண்டும். தேர்தல் முடிவடைந்து 42 நாள்களுக்குள்தான் தேர்தல் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும். எனவே, பொதுமக்களுக்கு 11 நாள்கள்தான் அவகாசம் கிடைக்கும்.

மக்கள் அதுவரையில் பார்த்துக்கொண்டிராமல், தேர்தல் காலங்களிலேயே வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களுக்கு எப்படி நிதி கிடைக்கின்றன என்பதை அறியவேண்டும். அவர்கள் எவ்வாறு செலவு செய்கின்றார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இப்படியாக தகவல்களை மக்கள் திரட்ட வேண்டும். தகவல்களை மக்கள் கையில் வைத்துக் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடும், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்களின் அறிக்கைகளை வைத்துக்கொண்டு தாங்கள் திரட்டிய தகவல்களுக்கும், வெளியிடப்படும் அறிக்கைக்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். அதை வைத்துக்கொண்டு உடனடியாகவே முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும். எனவே பொதுமக்கள் புலனாய்வாளர்களாக இருப்பதன் ஊடாகவே இந்தச் சட்டத்தின் ஊடான பெரும் பயனைப் பெறலாம். மேலும், தேர்தல் காலத்தில் இத்தகைய விடயங்களை முன்னெடுப்பதற்காக பொலிஸ் திணைக்களத்துக்கு தனியான மூத்த சொலிசிட்டர் ஜெனரலை நியமிக்குமாறு மக்கள், சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டால்தான் தேர்தல் செலவினம் தொடர்பான வழக்குகளை உடனடியாக தாக்கல் செய்வதற்கு பொலிஸாருக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கிடைக்கப்பெறும். பொலிஸார், சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை என்று சொல்லி காலத்தை இழுத்தடிக்க வாய்ப்பளிக்காமல் இருப்பதாயின் தனியானதொரு சொலிசிட்டர் ஜெனரல் நியமிக்கப்படவேண்டும். ஓய்வுபெற்ற சட்டமா அதிபர் ஒருவர், 'சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னமும் கிடைக்கவில்லை' என்ற பெயரில் புத்தகம் ஒன்றைக்கூட எழுதியுள்ளார். அதனால்தான் இதை நான் சொல்கிறேன்.

**கே: சிறைச்சாலைகளில் உள்ள சந்தேகநபர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துமாறு நீதிமன்றத்தை சில தரப்புகள் நாடியுள்ளன. இது முன்னரே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவேண்டிய தொன்றாக நீங்கள் பார்க்கவில்லையா?**

ப: இது முதல் தடவையாக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. நான் ஆணைக்குழு தவிசாளராக இருந்தபோதும் இதற்காக கடிதங்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் எனக்கு அனுப்பியிருந்தனர். சந்தேகநபர்கள் மற்றும் 6 மாதங்களுக்கு குறைவான சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எல்லோரும் வாக்களிக்கத் தகுதியானவர்கள்தான். எங்கள் நாட்டில் அவர்கள் வாக்களிக்கக்கூடிய நடைமுறை இன்னமும் இல்லை.

இலங்கையில் முற்கூட்டிய வாக்களிப்பு முறைமை இல்லை. எங்களிடம் தபால் வாக்களிப்பு மாத்திரம்தான் இருக்கின்றது. அதுவும் அரசாங்க ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்குத்தான். அரசாங்க ஊழியர்களில் தேர்தலுக்கு பணிபுரிபவர்களுக்குத்தான் தபால் வாக்களிப்பு உரிமை இருக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக தனியார் துறையிலுள்ளவர்களுக்கு தபால் வாக்களிப்பு உரிமை இல்லை. நீங்களே சிந்தியுங்கள், தனியார் பாதுகாப்பு ஊழியரால் வாக்களிப்புக்குச் செல்ல முடியுமா? ஊடகவியலாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூட வாக்களிக்க முடியாத நிலைமை இருக்கின்றது. அதிகம் ஏன்? அரசியல்வாதிகள் கூட வாக்களிக்க முடியாத சூழல் ஏற்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன், தேர்தல் கண்காணிப்புக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். தேர்தல் நாளன்று அவரால் கொழும்பில் வாக்களிக்க முடியவில்லை. அவர் என்னைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் வினவினார், ஆனால் எங்களது தேர்தல் நடைமுறையில் அதற்கு இடமில்லை.


தாதியர்கள், மருத்துவர்களுக்குகூட தபால் வாக்களிப்பு உரித்தில்லை. தேர்தல் நாளன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் மருத்துவமனைக்குச் செல்லும்போது அங்கிருந்த மருத்துவர்கள், தாதியர்கள் வாக்களிக்கச் சென்றால் நிலைமை எப்படியிருக்கும்? அவர்கள் தேர்தல் நாளன்று வாக்களிப்பதற்கு 4 மணித்தியாலங்கள் விடுப்பு எடுப்பதற்கு மட்டுமே உரித்துடையவர்கள்.

எங்கள் நாட்டின் தபால்மூல வாக்களிப்புத் தொடர்பில் திருத்தம் தேவை. அது பல்வேறு துறையினரும் வாக்களிக்ககூடிய வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதேபோன்று முற்கூட்டிய வாக்களிப்பு முறைமையை எங்கள் நாட்டில் அறிமுகப்படுத்தவேண்டும். அது தேர்தல் நாளன்று, தனியானதொரு வாக்குச் சாவடி ஊடான வாக்களிப்பாக இருந்தாலும் பரவாயில்லை. இந்த வாக்குச் சாவடி சிறைச்சாலை, மருத்துவமனை மற்றும் மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டால் மருத்துவர்கள், சந்தேகநபர்கள், ஊடகவியலாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் வாக்களிக்க உதவியாக இருக்கும். இந்தப் பரிந்துரையை நான் தவிசாளராகப் பதவி வகித்த காலத்திலும் முன்வைத்திருந்தேன். தற்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவும் முன்வைத்திருக்கின்றது.

இதைவிட இன்னொரு விடயமும் இருக்கின்றது. வெளிநாடுகளில் வாழும் இலங்கை வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் இன்னமும் இல்லை. எனது மகன்டுபாயில் இருக்கிறான். அவனுக்கு விடுமுறையில்லை. அவன் கூட வாக்களிக்க முடியாத நிலைமைதான் உள்ளது.

**கே: நீங்கள் குறிப்பிடுவதைப் போன்று பலருக்கும் வாக்களிக்கும் உரிமை இருந்தும் அதைப் பிரயோகிக்க முடியாத நிர்ப்பந்த சூழல் இருக்கின்றது. அதை இல்லாதொழிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றன. ஆனாலும் அத்தகைய தேர்தல் திருத்தங்கள் ஏன் சட்டமாக்கப்படவில்லை. இத்தகைய திருத்தச் சட்டங்களை முன்வைப்பதற்கு அரசியல்வாதிகளுக்கு உடன்பாடில்லையா?**

ப: இந்த விடயம் இதற்கு முன்பு காணப்பட்ட இரண்டு தேர்தல் ஆணைக்குழுக்களின் காலங்களில் மட்டுமின்றி. அதற்கு முன்னர் நிலவிய தேர்தல் திணைக்களமும் அதன் தலைவரான தேர்தல்கள் ஆணையாளரும் காணப்பட்ட காலப் பகுதிகளிலும் கூட கருத்தில் எடுக்கப்பட்டது. இது தொடர்பான விடய முன்வைப்புகள் வந்த பொழுதெல்லாம் அந்தந்தக் காலங்களில் காணப்பட்ட நாடாளுமன்றங்களுக்கும் சில வேளைகளில் தேர்தல் சட்ட மீளாய்வுக்காக நியமனம் செய்யப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களுக்கும் கூட தீர்வுக்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. சமகால உலகில் காணப்படுகின்ற 'தகைமை வாய்ந்த அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல்' என்று பொருள்படக்கூடிய 'All inclusive election' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படும் விடயம் தொடர்பில் மட்டுமின்றி தேர்தலன்று இடாப்பில் பெயர் உள்ள அனைவருக்கும் வாக்கைப் பிரயோகிப்பதற்கு அவகாசம் அளிப்பது தொடர்பிலும் இத்தகைய மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என எடுத்துக் கூறப்பட்டது. நாடாளுமன்றங்களும் இது தொடர்பான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முயன்றாலும் அதன் ஒரு சில பகுதிகளையே நிறைவேற்றிக் கொள்ள அவகாசம் கிடைத்திருக்கின்றது. உதாரணமாக ஒவ்வோர் ஆண்டும் வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்படுகின்ற பொழுது, ஒரு வருடத்துக்கு ஒரு முறை தான் 18 வயது பூர்த்தி செய்தவர்களின் பெயர்களை உள்ளடக்க முடியுமாயிருந்தது. ஆனால் அண்மையில் தேருநர் பதிவுக் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தச் சட்டம் காரணமாக, வருடத்தில் ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கும் ஒரு முறை 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களது பெயர்களுக்கான பட்டியலைத் தயாரித்து அவர்களின் அப்பெயர்ப்பட்டியலை குறை நிரப்பு பெயர் பட்டியலாக ஏற்கனவே வலுவிலுள்ள இடாப்புடன் இணைத்துக் கொள்ளும் முறை நடைமுறைக்கு வந்திருப்பதால் 18 வயது பூர்த்தி செய்கின்ற இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கேனும் உரிய இடாப்பில் பெயரைப் பதியவும் வாக்களிக்கவும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது.



ஆனால் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிப்புத் தினத்தன்று வாக்களிக்க முடியாமற் செல்கின்றவர்களுக்கு வாக்களிப்பதற்கான ஏற்பாட்டை செய்வதற்கான முயற்சிகளை சட்டவாக்குநர்கள் மேற்கொண்ட போதிலும் அது இன்னும் கை கூடாத நிலையில் இருக்கின்றது. அதற்காக சட்டவாக்குநர்கள் அதற்கு விருப்பம் இல்லை என்று கூறுவதை விட இலங்கைக்கு பொருத்தமான ஒரு நடைமுறையைச் சரியாக இனம் கண்டு சட்டமாக்குவதில் ஏற்பட்டிருக்கின்ற தாமதமே அதற்கான காரணம் எனக் கூற முடியும்.

**கே: எங்களது நாட்டு தேர்தல் முறைமையில் இலத்திரனியல் வாக்குப் பதிவு அறிமுகப்படுத்தப்படுவது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? எங்களது நாட்டு வாக்குச் சீட்டில் 'நோட்டோ' இன்னமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. அது எங்களுக்கு தேவையானதா?**

ப: இந்தியாவிலுள்ளதைப்போன்று இலத்திரனியல் வாக்குப் பதிவு முறைமை அறிமுகப்படுத்தப்படுவது நல்லது. ஆனால், இணையம் ஊடாக வாக்களிப்பு முறைமை பாதுகாப்பற்றது. தேர்தல்கள் ஆணைக்குழுகூட இலத்திரனியல் வாக்குப் பதிவு முறைமை சிறப்பானது என்று பரிந்துரைத்திருந்தது.

எங்களது நாட்டைப்பொறுத்தவரையில் வாக்களிப்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. வாக்கு எண்ணுவதில்தான் தாமதம் இருக்கின்றது. அதுவும் ஆகக்கூடியது 48 மணி நேரத்துக்குள் நாங்கள் தேர்தல் முடிவுகளை வெளியிடுகின்றோம். நாங்கள் வாக்கு எண்ணிக்கையில் 'ஸ்கானிங்' முறைமையை அறிமுகப்படுத்தினால் சிறப்பு என்று கருதுகின்றோம்.

அதேவேளை, இலத்திரனியல் வாக்குப் பதிவு முறைமை எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டால் ஒருவர் வாக்கிட்ட பின்னர் அவருக்கு அதற்குரிய ரசீது வழங்கப்பட வேண்டும். உதாரணத்துக்கு நீங்கள் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் எடுத்த பின்னர் ரசீது வழங்கப்படுவதைப்போன்று வழங்கப்படவேண்டும். அதை வாக்குப்பெட்டிக்குள் போடவேண்டும். இயந்திரத்தில் தவறு ஏதும் நிகழந்தால், உடனடியாகவே வாக்குப்பெட்டிக்குள் போடப்பட்ட 'ரசீதை' வைத்து கணக்கிட முடியும்.

ஆனால் இந்தியாவில்கூட தற்போது, இலத்திரனியல் வாக்குப்பதிவை விடுத்து வாக்குச்சீட்டு மூலமான வாக்களிப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற பரப்புரை தீவிர மாக்கப்பட்டிருக்கின்றது.

இலத்திரனியல் வாக்குப் பதிவை நாங்கள் இங்கே அறிமுகப்படுத்தினால் நிச்சயமாக 'நோட்டா'வையும் கொண்டுவர வேண்டும். ஆனால் வாக்குச் சீட்டு முறைமையில் அது தேவையற்றது. ஏனெனில் நீங்கள் வாக்குச்சீட்டில் உள்ள எவரையும் பொருத்தமானவர்கள் இல்லை என்று கருதினால், வாக்குச்சீட்டுக்கு குறுக்காக புள்ளடியிட்டு வரமுடியும். தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் மக்களுக்குப் பொறுப்புடன் நடந்துகொள்ளாதவிடத்து அவர்களை மீள அழைப்பதற்கான தெரிவும் வாக்குச்சீட்டில் கொடுக்கப்பட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு. காலிமுகத்திடலில் நடந்தது அதைப்போன்றதுதான். ஆனால் அது வன்முறை வடிவில் நடந்தது. எங்களது நாட்டில் இருப்பது பிரதிநித்துவ ஜனநாயகம். இது பெரும்பான்மையானோரின் முடிவில் இருக்கின்றது. நாங்கள் பங்கேற்பு ஜனநாயகத்தையே ஊக்குவிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார் ட்ரம்ப்



ஆர்.பிரகாஷ்

உலகின் ஒழுங்கையும் அதன் செல்நெறியையும் தீர்மானிக்கும் தேர்தலாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலே கருதப்படுவதுண்டு. ஆதலால்தான் எந்தவொரு நாட்டிலும் நடைபெறுகின்ற தேர்தலைக் காட்டினும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மிகப்பெரும் எதிர்பார்ப்பு உலக அரங்கில் பூதாகரமாக வியாபித்து நிற்கும். உக்ரைன் - ரஷ்ய மோதல், காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை, வடகொரிய - தென்கொரியப் போர், தென்சீனக் கடற்பரப்பின் பதற்றநிலை என உலகமே இன்று போர்முனையாக மாறிவிட்ட பின்னணியில், எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்தான் இந்த மோதல்களின் அடுத்தகட்ட போக்கைத் தீர்மானிக்க வல்லதாக அமைந்திருக்கின்றது என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை.

### பின்வாங்கிய பைடன்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்தான் ஆகப்பெரும் ஜனநாயகத் தத்துவங்கள் நிரம்பிய தேர்தலாக இன்றளவும் கருதப்படுகின்றது. ஏனெனில், அங்கு தனிநபர் செல்வாக்கு அல்லது குழுச் செல்வாக்கு இல்லாத நிலையில்தான் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். மக்கள் அரங்கில் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர், கட்சிக்குள்ளேயே மாகாணம் மாகாணமாகத் தேர்தல்கள் இடம்பெறும். குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி இவ்விரு கட்சிகளிலும் ஜனாதிபதி வேட்பாளராக யார் போட்டியிட விருப்பமோ அவர்கள் முதலில் கட்சி மட்டத்திலான உள்ளகத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும். அந்தத் தேர்தலில் வெற்றிபெறுபவர்களே பின்னர் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க் கட்சியின் வேட்பாளருடன் மக்கள் முன்னிலையில் போட்டியிடுவார். மூன்று மாதங்களாக இடம்பெற்ற கட்சி மட்டத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் ட்ரம்பும் ஜனநாயகக் கட்சியின் சார்பில் பைடனும் வெற்றிபெற்று, நவம்பரில் மீண்டும் ஒரு முறை நேருக்குநேர் மோதவிருந்த நிலையில், தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார் பைடன். பைடனின் இந்த அறிவிப்பு அவருடைய சுய விருப்பத்தின் அடிப்படையிலானது போன்று காட்சிப்படுத்தப்பட்டாலும் இதன் பின்னாலுள்ள நகர்வுகள் மிகப் பயங்கரமானவை. பைடனின் முதுமை, நினைவாற்றல் இழப்பு, உடற்தகுதியின்மை இவ்வாறான காரணங்களைக் காண்பித்து அவர் தேர்தலில் இருந்து விலகவேண்டும் என்ற 'ஒத்துழையாமை' இயக்கத்தை நடத்தியே அவரை வெளியேற்றியிருக்கின்றனர் ஜனநாயகக் கட்சியின் பெருந்தலைகள். தற்போதைய நிலையில் பைடனால் ட்ரம்பைத் தோற்கடிக்க முடியாததால்தான் இவ்வாறானதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் காண்பிப்பினும், இங்கு அமெரிக்க உட்கட்சி ஜனநாயகத் தத்துவங்கள் கொன்று புதைக்கப்பட்டிருப்பது மெய்ப்பிதமாகியுள்ளது. ஜனநாயகக் கட்சியினரின் இந்தத் தடுமாற்றம் ட்ரம்புக்கான பாதைகளைத் திறந்து விட்டிருக்கின்றது என்று சொன்னாலும் அதில் தப்பில்லை.

### கமலா எதிர் ட்ரம்ப்

பைடன் விலகியுள்ள நிலையில், அவருடைய இடத்துக்கு கமலா ஹறிஸைக் களமிறக்க ஜனநாயகக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவ்வாறு கமலா ஹறிஸ் போட்டியிட்டால், அவரால் ட்ரம்புக்கு நிகராக நிற்கமுடியுமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கப்படமுடியாதது. கமலா ஒரு குற்றவியல் சட்டத்தரணி. அத்துடன், அமெரிக்காவின் தற்போதைய துணை ஜனாதிபதியும் கூட. ஒரு சட்டத்தரணியாகவும் துணை ஜனாதிபதியாகவும் கொடிகட்டிப் பறந்தவர் கமலா ஹறிஸ். ஆனால், ட்ரம்ப் தற்போது மக்களின் நாயகன். அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பணவீக்கம், உக்ரைன் - ரஷ்ய மோதலால் ஏற்பட்டுள்ள உலகப் போர்நிலைகள் என்பவற்றைத் தணிக்க ட்ரம்ப் மேற்கொள்ளும் தற்துணிவான முடிவுகள்தான் தற்போது காலத்தேவை என்பதை அமெரிக்கர்கள் நம்பத் தொடங்கியிருக்கின்றனர். ட்ரம்பின் தேர்தல் பரப்புரைகள் ஒவ்வொன்றிலும் கலந்துகொள்ளும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம் அதைக் கட்டியம் செய்கின்றது. எல்லாவற்றையும் விட அமெரிக்க அதிபரைத் தீர்மானிப்பதில் துருப்புச் சீட்டாகக் காணப்படும் யூதப் பின்னணி இம்முறை ட்ரம்புக்கு முழுக்கமுழுக்க சாதகமாகவே காணப்படுகின்றது. ட்ரம்பின் காலத்தில்தான் ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக அறிவிக்கப்பட்டது. பைடனின் காலத்தில் இஸ்ரேல் எதிர்கொண்ட அத்தனையும் பின்னடைவே. இது விடயத்திலும் ட்ரம்ப் தற்போது வேண்டப்படுபவராகவும் விரும்பப்படுபவராகவும் உள்ளார். எல்லாவற்றையும் விட, தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ட்ரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுதான் இந்தத் தேர்தலைத் தீர்மானிக்கும் என்பது நிபுணர்களின் கணிப்பாகக் காணப்படுகின்றது. துப்பாக்கிச் சூட்டையடுத்து, ட்ரம்புக்கான ஆதரவு அலை 3 வீதத்தால் அதிகரித்துள்ளன என்கின்றன புள்ளிவிவரங்கள்.

### காத்திருக்கும் ஆபத்து

இவ்வாறு வலுவான நிலையில் உள்ள ட்ரம்ப், இனி சரிவொன்றைச் சந்திப்பாராக இருந்தால், அது கமலா ஹறிஸுடனான நேரடி விவாதத்தில்தான். குற்றவியல் சட்டத்தரணியான நான், விவாதத்தின் போது ட்ரம்பை குற்றவாளியாகவே அணுகுவேன் என்று கமலா ஹறிஸ் முழங்கியிருக்கின்றார். கமலா ஹறிஸுக்கு இயல்பாக இருக்கும் விவாதத்திறன் மற்றும் பேச்சாற்றல்தான் ட்ரம்பின் தலைமீது தற்போது தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி.

# தாங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்புகள் இல்லாத பின்னணிக்குள்தான் தனிநபர் ஓட்டங்களும் தனிநபர் சுழிப்புகளும் இடம்பெறுகின்றன. இருக்கின்ற கட்டமைப்புகள் பலவீனமாக இருப்பதினால்தான் நீதிமன்றம் ஏறவேண்டியிருக்கிறது. கட்டமைப்புக்கு பொறுப்புக்கூறும் ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் முடிவுகள் கூட்டாக எடுக்கப்படும். அதில் ஒரு கூட்டுப் பொறுப்பும் இருக்கும்.

தமிழ் அரசியல் பரப்பில் விடயங்களை கட்டமைப்புக்கூடாக விளங்கிக் கொள்ளும் தன்மையும் குறைவு. அதனால்தான் யார் ஜனாதிபதி வேட்பாளர் ?அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் எது?யாரையாவது மனதில் வைத்துக் கொண்டு ஒரு வேட்பாளரைத் தேடுகிறோம் என்று பொய் சொல்லப்படுகிறதா? போன்ற கேள்விகள் அடிக்கடி வருகின்றன. அதற்கு ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும்;அந்தக் கட்டமைப்பு கூட்டாக முடிவு எடுக்கும்;அந்த முடிவுகளின் அடிப்படையில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார்; அவருக்குரிய தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒரு கட்டமைப்பு எழுதும்...என்றெல்லாம் கூறப்பட்ட போதிலும், இதுபோன்ற கேள்விகள் திரும்பத் திரும்பக் கேட்கப்படுகின்றன.

இப்பொழுது ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அது கட்சிகளுக்கும் மக்கள் அமைப்புக்கும் இடையிலானது. இரண்டு தரப்பையும் சேர்ந்த ஏழு,ஏழு பேர் அதில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் 14 பேர். இந்த 14 பேரும் உபகுழுக்களை உருவாக்குவார்கள். ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்க ஓர் உபகுழு,தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுத ஓர் உபகுழு,நிதியை முகாமை செய்ய ஓர் உபகுழு....என்று உபகுழுக்கள் உருவாக்கப்படும் என்று அப்பொதுக் கட்டமைப்பு கூறுகின்றது. நவீன தமிழ் அரசியலில் இது ஒரு புதிய நகர்வு. ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தமிழ்த்தேசிய அரசியல் போக்கை கூட்டாகத் தீர்மானிப்பது என்பது. இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குள் ஏழு கட்சிகள் உண்டு. எதிர்காலத்தில் இணையக் கூடிய கட்சிகளுக்காக அந்த உடன்படிக்கை திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று அந்த நிகழ்வில் கூறப்பட்டது.

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியமானவற்றில் இருந்துதான் சாத்தியமற்றவற்றை அதாவது அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்யலாம். சாத்தியமானவற்றிலிருந்துதான் அதைத் தொடங்கலாம். வானத்தில் எவ்வளவு உயரக் கோபுரத்தைக் கட்டுவதாக இருந்தாலும் நிலத்தில் கிடைக்கும் நிலப்பரப்பில்தான் அத்திபாரத்தைப் போடவேண்டும். அப்படித்தான் இந்த உடன்படிக்கையும். சாத்தியமானவற்றுக்கிடையிலான ஓர் உடன்படிக்கை. எதிர்காலத்தில் இது விரிந்தகன்ற தளத்தில்,பரந்தகன்ற பொருளில் ஒரு தேசத் திரட்சியாகக் கட்டி எழுப்பப்படும் என்று இரண்டு தரப்புகளும் எதிர்பார்க்கின்றன.

கடந்த 15 ஆண்டுகால தமிழரசியல் எனப்படுவது எதிர்த் தரப்புக்கு அல்லது வெளித் தரப்புக்கு பதில்வினை ஆற்றும் "ரியாக்டிவ் பொலிடிக்ஸ்"ஆகத்தான் இருந்து வந்துள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது, அதை "ப்ரோஆக்டிவாக" மாற்றும். அதாவது செயல்முனைப்புள்ளதாக மாற்றும். தமிழ்த்தரப்பு இப்பொழுது ஒரு புதிய நகர்வை முன்னெடுக்கின்றது. இதற்கு இனி வெளித்தரப்புகளும் தென்னிலங்கைத் தரப்புகளும் பதில்வினையாற்ற வேண்டிவரும். அதாவது வெளித் தரப்புகள் தமிழ்த்தரப்பை நோக்கி வரவேண்டியிருக்கும். இவ்வாறு தமிழரசியலை "ப்ரோ ஆக்டிவாக" செயல்முனைப்புள்ளதாக மாற்றும்பொழுது, தமிழ்மக்கள் தங்களுடைய சுவர்களில் வண்ணச் சுவரொட்டிகளை ஒட்டும் கட்சிகளுக்கு தாங்கள் யார் என்பதைக் காட்டுவார்கள்.

# ஊர்ப்புதினம்

பாகம் 2



இராகவன்

"து நான் போனகிழமை எங்கட அம்மாவின்ர தகப்பன் தில்லையம்பல வாத்தியாரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லியிருந்தனான். அவரை அம்மா, பெரியம்மாக்களெல்லாம் "பெத்தப்பா" எண்டு சொல்லுவினம். இப்பவும் ஊருக்குள்ள சில வயதுபோன ஆக்கள் "தில்லையம்பல வாத்தியார் எங்களுக்கெல்லாம் நோட்டுப் புத்தகம் வாங்கித்தந்து பள்ளிக்குக் கூட்டிக்கொண்டுபோன புண்ணியவாளன்" எண்டு சொல்லுவினம். ஆள் நல்ல வளத்தியாம். பின்னுக்குக் குடும்பி வைச்சுக் கடுக்கனும் காதில போட்டிருப்பாராம். வெள்ளை வேட்டி நெஷனல் உடுத்துக் கறுத்தக்குடை பிடிச்சுக் கொண்டு போய்வருவாராம். கனக்கப்புத்தகங்கள் வீட்டில வச்சிருந்தவராம். ஆரும் வாசிக்கக்கேட்டால் லேசில இரவல் குடுக்கமாட்டாராம். "வீட்ட வந்திருந்து எடுத்து வாசிச்சுப்போட்டு போ" எண்டு சொல்லுவாராம். இப்ப நாங்கள் இருக்கிற தல்லையம்புல வீடுதான் அவரின்ரை தாய்வீடாம். இந்தத் தல்லையப்புலம் பத்திரகாளிதான் அவரின்ரை குலதெய்வமாம். இது சரியான சின்னக்கோயிலா இருக்கேக்குள்ள அவர்தான் காலமையும், பின்னேரமும் விளக்கு வைக்கிறவராம் எண்டு எங்கட அம்மா கதைகதையாச் சொல்லுவா.

அம்மாக்கு எட்டு வயசு நடக்கேக்குள்ள அவருக்கு வயிற்றுப்போக்கு வந்து திடீரெண்டு செத்துட்டாராம். அவரின்ர தாயை எங்கடையம்மா "அப்புவாத்தை" எண்டு சொல்லுவா. அவருக்கொரு தம்பியிருந்தவராம். அவரையும் எங்கடையம்மா "பெத்தப்பா" எண்டுதான் சொல்லுறவா. அவரும் ஒரு போக்கான ஆளாம். கனக்க மாடுகள் வச்சிருந்தவராம். காலமை மேய்ச்சலுக்குக் கொண்டுபோய் பின்னேரம் சாய்ச்சுக் கொண்டுவருவாராம். அவர் கடைசி வரைக்கும் கலியாணங்கட்டாமல் தனியாளாயிருந்தவராம். அம்மாதான் அவரைப் பாத்தெடுத்ததால இப்ப நாங்களிருக்கிற காணி நிலத்தை அம்மாக்கு எழுதிக் குடுத்தவராம். அவர் 1970 களிலதான் காலமானவர். அவற்ர பெயர் வேலுப்பிள்ளை. அண்ணாக்களுக்கு அவரை நல்லாத்தெரியும். ஆனால் எனக்குத்தெரியாது. நான் பிறக்க முந்தியே அவர் செத்திட்டார். அவற்ர தாய்க்காரி அதுதான் "அப்புவாத்தை". அம்மா கலியாணங்கட்ட முந்தியே செத்திட்டாவாம். இந்தத் தல்லையப்புலம் பத்திரகாளியைப் பற்றி கதை வரேக்குள்ள இதெல்லாம் எனக்குக் கோர்வையா ஞாபகம் வருகுது. பத்திரகாளி கோவிலுக்கு முன்னால ஒரு குளமிருக்குது. அதைத் தல்லையப்புலக் குளம் எண்டு சொல்லுவினம். அதுக்குப் பக்கத்தில ஒரு கட்டுக்கிணறும் முந்தியிருந்தது. இப்ப தூத்தாச்சு. குளத்துக்கட்டோட ஒரு பெரிய பூவரச மரம் நிண்டது. குறைஞ்சது இருநூறு வரிசமெண்டாலும் வரும். அதையும் தறிச்சாச்சு. தல்லையப்புலக் குளத்துக்கு ஒரு கம்பீரத்தைக் குடுத்துக்கொண்டு நிண்டது அந்தப்பூவரசுதான். மாரிகாலம் தல்லையப்புலக் குளம் நிரம்பி வழியும். எனக்கும் சிவனுக்கும் பெரிய கொண்டாட்டம். ஓடிப்போய்க்குளத்துக்குள்ள விழுந்து குளிப்பம்.

50

எங்களோட இன்னுஞ்சில பெடியள் கருணாநிதி, ஒல்லிக்காந்தன், நித்தி, சிவநேசன் எண்டு வந்து குளிப்பாங்கள். அவங்கள் குளத்தில குளிச்சிட்டு பக்கத்தியிருக்கிற கட்டுக்கிணத்துக்குள்ளையும் விழுந்து குளிப்பாங்கள். எனக்கு அந்த அலுவல் சரிவராது. தள்ளிநிண்டு வாய்பாப்பன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org